22nd September 1958]

SRI M. C. MUTHUKUMARASWAMY : இந்த கிராமம் தர்மபுரி ஆதீனத்திற்குச் சொந்தம். சர்க்கார் இதில் தலையிட்டு வீடுகள் கட்டிக்கொடுப்பது என்றால் ஆதீனம் உதவி செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, இதில் உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI P. KAKKAN : வீடுகள் கட்டுவதற்கு அந்த இடங்களையெல்லாம் பார்த்து முடிவு செய்யவேண்டியிருக்கிறது. கலெக்டர் அவர்கள் சிபார்சு செய்து அதன்பேரில் ஹரிஜன நல இலாகா டைரக்டர் அவர்கள் வீடுகள் கட்டுவதுபற்றி முடிவு செய்யவேண்டும். கனம் அங்கத்தினர் அவர்கள் இதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தால், அது கவனிக்கப்படும்.

SRI P. JAYARAJ : மாயவரம் தாலுகாவில் ஹரிஜனங்களுக்காக எத்தனை வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன? அவைகள் எங்கே கட்டிக் கொடுக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அதுபற்றி தனிக் கேள்வி போடவேண்டும்.

*Madras Corporation*

* 413 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) when the Madras Corporation Council submitted its Elementary Education Budget to the Government for its approval;

(*b*) whether it has been approved by the Government; and

(*c*) if not, the reasons therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The Elementary Education budget of the Corporation of Madras for 1958–59 was submitted to Government through the Director of Public Instruction on 11th April 1958.

(*b*) Yes, Sir.

(*c*) Does not arise.

SRI K. VINAYAKAM : Why was approval held up for a long time? Was not the Budget approved only recently, after I gave notice of the question? Are the Government aware that the delay in approving the Budget has held up the execution of several developmental schemes regarding elementary education?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir. This was approved on 13th August 1958. I do agree there has been some delay. I shall look into it.

SRIMATHI T. N. ANANDANAYAKI : எலிமெண்டரி எஜுகேஷன் பட்ஜெட்டிலே ஆயாக்களுக்காக ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது. ஆனால், அரசாங்கம் எங்களுக்கு ஆயாக்களை நியமிப்பதற்கு அதிகாரம் அளிப்பதில்லை. இந்த பட்ஜெட்டிலாவது ஆயாக்களை நியமிப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்படுமா?

MR. SPEAKER : அதற்கு தனி கேள்வி போடவேண்டும்.

[22nd September 1958

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த விவரம் எங்களிடத்தில் இல்லை. இங்கு அசெம்பளி அங்கத்தினர் என்ற ரீதியில் பேசுகிறார்கள் என்று நினைக்கிறேன். 'எங்களுக்கு அதிகாரம் அளிப்பதில்லை' என்று கார்பரேஷன் அங்கத்தினர் என்று நினைத்துக்கொண்டு இங்கு பேசுவது தவறு.

MR. SPEAKER : She has a dual role. (Laughter.)

*Irrigation*

* 414 *Q.*—SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received any petition recently from the villagers of No. 105, Thillaivilagam vattam regarding the provision of irrigation facilities for Musaveli in Thiruthuraipundi taluk; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Two petitions, one from Sri Swamiappa Konar and others of Thillaivilagam village requesting irrigation facilities to 150 acres of dry lands lying on the north of Thillaivilagam channel and another from Sri V. Subramania Thevar and others of Therkkukadu, Thillaivilagam village, requesting irrigation facilities to 500 acres out of an extent of 1,500 acres of alem (swamp) poramboke lands in Thillaivilagam village, were received on 18th December 1957.

(*b*) The representation from Sri Swamiappa Konar and others was referred to the Chief Engineer (Irrigation). He has reported that as the 150 acres of dry lands are high in level when compared with the rear normal sil level of Thillaivilagam channel head sluice, the lands cannot be given supply from the channel. The other petition received from Sri V. Subramania Thevar and others was referred to the Collector of Tanjore. He is taking action to provide irrigation facilities to Musaveli Block in consultation with the Executive Engineer, Vennar Division, Tanjore, after executing certain works at an approximate cost of Rs. 22,000.

SRI A. VEDARATHNAM : இந்த நிலங்களுக்கு இப்பொழுது பாசனம் அளிக்கப்பட்டாகிவிட்டது. அதைச் சட்டபூர்வமாக அங்கீகாரம் செய்து உத்தரவு இடுவார்களா? அப்படியானால் அந்த உத்தரவு எ பொழுது கொடுப்பார்கள்?

THE HON. SRI M. A. MANICKAVELU : தண்ணீர் கொடுப்பது என்று ஏற்பட்டு விட்டால், சரியான வகையிலே அதற்கு வேண்டியதைச் செய்து எடுத்து வர வேண்டியதுதான். அவைகளெல்லாம் எப்பொழுது நடக்கும் என்பதை நான் இப்பொழுது சொல்லுவதற்கில்லை.

*Bridge over Kamandalanaga nadhi*

* 415 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) ஆரணிக்கருகில் கமண்டலநாக நதியின் மேல்பாலம் கட்டுவது என்னவாயிற்று?